# ஏப்ரல் - 06 - வியாழன்

**புனித செலஸ்தீன்**

**“என்றுமுள்ள உடன் படிக்கையை நான் நிலை நாட்டுவேன், உனக்கும், உனக்குப்பின் வரும் வழிமரபினருக்கும் நான் கடவுளாக இருப்பேன்” (தொ.நூல் 17:7)**

## முதல் வாசகம் : தொடக்க நூல்17 : 3 – 9

அப்பொழுது ஆபிராம் பணிந்து வணங்க, கடவுள் அவரிடம் கூறியது: ”உன்னுடன் நான் செய்துகொள்ளும் உடன்படிக்கை இதுவே் எண்ணற்ற நாடுகளுக்கு நீ தந்தை ஆவாய். இனி உன்பெயர் ஆபிராம் அன்று ”ஆபிரகாம்” என்ற பெயரால் நீ அழைக்கப்படுவாய். ஏனெனில் எண்ணற்ற நாடுகளுக்கு உன்னை நான் மூதாதையாக்குகிறேன். மிகப் பெருமளவில் உன்னைப் பலுகச் செய்வேன் உன்னிடமிருந்து நாடுகளை உண்டாக்குவேன். உன்னிடமிருந்து அரசர்கள் தோன்றுவர். தலைமுறை தலை முறையாக உன்னுடனும், உனக்குப்பின் வரும் உன் வழி மரபினருடனும் என்றுமுள்ள உடன்படிக்கையை நான் நிலை நாட்டுவேன். இதனால் உனக்கும் உனக்குப்பின் வரும் உன் வழி மரபினருக்கும் நான் கடவுளாக இருப்பேன். நீ தங்கியிருக்கும் நாட்டையும் கானான் நாடு முழுவதையும் என்றுமுள்ள உரிமைச் சொத்தாக உனக்கும் உனக்குப்பின் உன் வழி மரபினருக்கும் வழங்குவேன். நான் அவர்களுக்குக் கடவுளாக இருப்பேன்” என்றார். மீண்டும் கடவுள் ஆபிரகாமிடம், ”நீயும் தலைமுறை தோறும் உனக்குப்பின் வரும் உன் வழிமரபினரும் என் உடன்படிக்கையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

**பதில்பாடல் :** ஆண்டவர் தம் உடன்படிக்கையை

என்றென்றும் நினைவு கொள்கின்றார்

## நற்செய்தி: யோவான் 8: 51 – 59

அக்காலத்தில் இயேசு யூதர்களை நோக்கி,“என் வார்த்தையைக் கடைப்பிடிப்போர் என்றுமே சாகமாட்டார்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்” என்றார். யூதர்கள் அவரிடம், ”நீ பேய் பிடித்தவன்தான் என்பது இப்போது தெரிந்துவிட்டது. ஆபிரகாம் இறந்தார் இறைவாக்கினர்களும் இறந்தார்கள். ஆனால் என் வார்த்தையைக் கடைப் பிடிப்போர் என்றுமே சாகமாட்டார் என்கிறாயே!எங்கள் தந்தை ஆபிரகாமைவிட நீ பெரியவனோ? ஆபிரகாம் இறந்தார் இறைவாக்கினரும் இறந்தனர். நீ யாரென்று நினைத்துக் கொண்டிருக்கிறாய்?” என்றார்கள். இயேசு மறுமொழியாக, ”நானே என்னைப் பெருமைப்படுத்தினால், அது எனக்குப் பெருமை இல்லை. என்னைப் பெருமைப்படுத்துபவர் என் தந்தையே. அவரையே நீங்கள் உங்கள் தந்தை என்றும் சொல்கிறீர்கள். ஆனால் அவரை உங்களுக்குத் தெரியாது எனக்குத் தெரியும். எனக்கு அவரைத் தெரியாது என நான் சொன்னால் உங்களைப்போல நானும் பொய்யனாவேன். அவரை எனக்குத் தெரியும். அவருடைய வார்த்தையையும் நான் கடைபிடிக்கிறேன். உங்கள் தந்தை ஆபிரகாம் நான் வரும் காலத்தைக் காண முடியும் என்பதை முன்னிட்டுப் பேருவகை கொண்டார் அதனைக் கண்டபோது மகிழ்ச்சியும் கொண்டார்” என்றார்.யூதர்கள் அவரை நோக்கி, ”உனக்கு இன்னும் ஐம்பது வயது கூட ஆகவில்லை நீ ஆபிரகாமைக் கண்டிருக்கிறாயா?” என்று கேட்டார்கள். இயேசு அவர்களிடம், ”ஆபிரகாம் பிறப்பதற்கு முன்பே நான் இருக்கிறேன் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்” என்றார்.இதைக் கேட்ட அவர்கள் அவர்மேல் எறியக் கற்களை எடுத்தார்கள். ஆனால் இயேசு மறைவாக நழுவிக் கோவிலிலிருந்து வெளியேறினார்.

**தியானம்:** இறைவனது வார்த்தையில் நம்பிக்கை வைத்தால் தலைமுறை தலைமுறையாக உன்னுடனும் உனக்குப் பின்வரும் உன் வழிமரபினருடனும் என்றுமுள உடன்படிக்கையை நிலைநாட்டுவேன்” என்று கூறி ஆண்டவர் ஆபிரகாமுடன் உடன்படிக்கை செய்வதனை முதல் வாசகத்தில் பார்க்கின்றோம். ஆபிரகாம் எல்லா வகையிலும் ஆண்டவரது குரலுக்கு செவிசாய்த்ததனால் விசுவாசத்தின் தந்நை என ஆண்டவரால் உயர்த்தப்பட்டார். தவக்காலத்தில் இறுதிவாரத்தில் இருக்கும் எமக்கும் அதே உடன்படிக்கையை நற்செய்தி வாயிலாக நினைவூட்டுகின்றார் இறைமகன் இயேசு. என் வார்தையைக் கடைப்பிடிப்போர் என்றுமே சாகமாட்டார்கள் என்று உறுதியாக உங்களுக்குச் சொல்லுகின்றேன்.(யோவா.3:51) இவ்வாறான நமபிக்கை ஊட்டும் பல இறைவார்த்தைகளை நாம் வேதாகமத்தில் வாசிக்கின்றோம். அவை அனைத்தும் முழுமையான மனமாற்றத்திற்கு அழைத்துச் செல்லும். அர்த்தமுள்ள வார்த்தைகள். நமது வாழ்வின் மாறுதல்களுக்காகவே அவை எம்மிடையே விதைக்கப்பட்டுள்ளன. ஆகவே ஆண்டவர் தமது உடன்படிக்கையை என்றென்றும் நினைவில் கொள்கின்றார் என்ற நம்பிக்கையோடு இறைவார்த்தையில் நம்பிக்கை வைத்து வாழ்வோம். அவ்வாறு நாம் வாழும் பொழுது நம்முடைய வெளிப்பாடான பக்தி முயற்சிகள் யாவும் அர்த்தமுள்ளதாக மிளிரும்.